சுருக்கம்

வேளாண்மை – நில எடுப்பு சின்ன சேலம் வட்டம் வடக்கனந்தல் கிராமம் – அரசு விதைப்பண்ணைக்கு நிலம் கையகப்படுத்தப்பட்டது – திரு V.T.E. திருநாராயணன், த/பெ. இளையாப்பிள்ளை, வடக்கனந்தல் கிராமம், சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்றத்தில் LAOP.No.15/1996, வழக்கு தொடர்ந்தது – கூடுதல் இழப்பீட்டுத் தொகை வழங்க நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டது – இழப்பீட்டுத் தொகை வழங்கியது – பின்னேற்பாணை – வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை(வேஉ3)துறை

திருவள்ளுவர் ஆண்டு 2049, ஆவணி மாதம் 7 ஆம் நாள்

அரசாணை(டி)எண்.186 நாள் 23.08.2018

படிக்கப்பட்டது

1 அரசாணை (டி) எண்.272, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 03.11.2017.
2. அரசாணை (டி) எண். 55, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 28.03.2018
3. வேளாண்மை இயக்குநரின் கடித எண் டான்சிடா 1/143929/2016, நாள் 22.06.2018

*******

ஆணை:

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் வட்டம் வடக்கனந்தல் கிராமத்தில் அரசு விதைப்பண்ணைக்காக நிலங்களை கையகப்படுத்தி வழங்கப்பட்ட இழப்பீட்டு தொகை போதுமானது இல்லை என்று மேற்படி நிலங்களின் உரிமையாளரான திரு.V.T.E. திருநாராயணன், த/பெ. இளையாப்பிள்ளை என்பவர் கூடுதல் இழப்பீட்டு தொகை கோரி தொடர்ந்த வழக்கு LAOP.No.15/1996, குறித்து கள்ளக்குறிச்சி சார்பு நீதிமன்ற தீர்ப்பின் படி, தனியருக்கு கூடுதல் இழப்பீட்டு தொகை ரூ.3,28,446/– (மூன்று இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து நானூற்று நாற்பத்து ஆறு மட்டும்) வழங்க ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி, மேற்படி கூடுதல் இழப்பீட்டு தொகை ரூ.3,28,446/–ஐ கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் 2017–2018 ஆம் ஆண்டு இறுதி திருத்த மதிப்பீடு / இறுதி துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டு, அத்தொகையினை தனியருக்கு வழங்கும்படி வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

"2401 – 00– பயிர் வளர்ப்பு– 103– விதைகள் – மாநிலச் செலவினங்கள் –AA- அரசு விதைப்பண்ணைகள் ஏற்படுத்துதல்–51–இழப்பீடு –02–ஏனைய இழப்பீடுகள்
(த.தொகு. 2401 00 103 AA 5124)

(த.பி.பா)

3. வேளாண்மை இயக்குநர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட தனது கடிதத்தில், வேளாண்மை இயக்குநரக வரவு செலவு பிரிவின் குறிப்பின்படி 2017–2018 –ஆம் ஆண்டின் இறுதி மாற்று நிதி ஒதுக்கீட்டில் (FMA)

> “2401 – 00– பயிர் வளர்ப்பு– 103– விதைகள் – மாநிலச் செலவினங்கள் – AC – அரசு விதைப்பண்ணைகள் ஏற்படுத்துதல்–51–இழப்பீடு –02–ஏனைய இழப்பீடுகள்” (து.தொகு. 2401 00 103 AC 5120)

என்ற கணக்கு தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து விவரம் தெரிவிக்கப்பட்டதன் பேரில், இழப்பீட்டு தொகை ரூ.3,28,446/– ஐ விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநரால் பெற்று, கள்ளக்குறிச்சி வருவாய் கோட்டாசியர் மூலமாக பயனாளிக்கு வழங்கப்பட்டது என்றும், எனவே, அரசாணை (டி) எண்.55, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 28.03.2018–ல் குறிப்பிட்டுள்ள 103 – AA என்ற கணக்குத் தலைப்பிற்கு பதிலாக 103– AC கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்த தொகையை பெற்று வழங்கியமைக்கு பின்னேற்பாணையும் மற்றும் அரசாணை (டி) எண்.55, வேளாண்மைத் (வேஉ3) துறை, நாள் 28.03.2018 –இல் குறிப்பிட்டுள்ள ‘ 103 – AA ’ என்ற கணக்குத் தலைப்பிற்குப் பதிலாக, ‘ 103 – AC ’ என்ற கணக்குத் தலைப்பிற்கு திருத்திய அரசாணை வழங்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் ஆய்வு செய்து அரசாணை (டி) எண்.55, வேளாண்மை (வேஉ3) துறை, நாள் 28.03.2018–ல் குறிப்பிட்டுள்ள கணக்கு தலைப்பு ‘ 2401-00-103 – AA 51 –02’ என்பதற்கு பதிலாக ‘2401 – 00 – 103 – AC – 51–02’ கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்த தொகையை பெற்று வழங்கிய செயலுக்கு பின்னேற்பு அளித்து, அரசு ஆணையிடுகிறது.

5. இந்த ஆணை நிதித்துறையின் அ.சா. எண்.40514/வேளாண்மை/2018, நாள் 16.08.2018 இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சேப்பாக்கம், சென்னை –5
மாவட்ட ஆட்சியர், விழுப்புரம் மாவட்டம்
மாவட்ட கருவூல அலுவலர், விழுப்புரம் மாவட்டம்
நகல்
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், சென்னை –9
நிதி (வேளாண்மை)த்துறை, சென்னை–9
வருவாய் மற்றும் பேரிடம் மேலாண்மைத்துறை, சென்னை–9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 23/08/18